
# 25

## வெள்ளி விழா

30.07.1991 - 30.07.2016



இறைவா!
பணிக்குருத்துவத்தில்
இருபத்தைந்து ஆண்டுகள்...
பொங்கும்
ஆனந்தம்
அனைத்துக்கும்
ஊற்று
உன்

# அருள்

# அருள்

## அருள்பணி. அருளானந்தம் யாவிஸ்
## அடிகளாரின்
## வெள்ளி விழா மலர்

30.07.1991 – 30.07.2016

கோவில் வீதி, யாழ்ப்பாணம்

## Sacerdotal Silver Jubilee Message from His Lordship Rt Revd. Dr. Justin B. Gnanapragasam



I am very pleased to send my warm greetings and prayerful wishes to Revd. Fr. A.J. Yavis who is celebrating his Sacerdotal silver Jubilee this year. It. Is indeed a great joy to know that he has chalked 25 years in serving God and His people.

Fr. A. J. Yavis, at his early age itself responded positively to the Lord's Call and has shown a desire to become a priest and to serve the Lord. He comes from a devoted Catholic family which is known for its faithfulness to God and respect for His Priests. Fr. A.J. Yavis has served in many parishes in my diocese and has borne the responsibility of directing the Human Development Center for some years, He, is now serving as parish priest of Point Pedro and as Dean of Point Pedro Deanery. All along the 25 years of priestly ministry he has shown a great concern for the people, being kind to their needs and also faithfully serving his Lord and Master.

"I have chosen you from your mother's womb and I called you by name". Priests are chosen from among the people to nourish them with the Word of God and to serve them just as one who called them, Jesus Christ. I take this opportunity to thank Fr. A.J. Yavis for all his services to the diocese and my people and wish him many more years of fruitful ministry in the Lord's vineyard.

Yours in the Lord & MI
Rt. Revd. Dr. Justin B. Gnanapragasam
Bishop of Jaffna.

# முன்னாள் ஆயர் பேரருள்திரு
# தோமஸ் சவுந்தரநாயகம்
# ஆண்டகையின் வாழ்த்துச் செய்தி



யாழ்மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் அருளானந்தம் ஜொனாலி யாவிஸ் அவர்கள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட 25ம் வருட நிறைவை ஆடித்திங்கள் 30ம் நாள் கொண்டாடுகின்றார். குருத்துவ வெள்ளிவிழா மகிழ்வில் இறைவனுக்கு நன்றி சொல்லும் அருட்தந்தை யாவிஸ் அடிகளாருக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். இவ்வேளையில் அவரது பணி வாழ்வு சிறக்க இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

யாழ் மறைமாவட்டத்தின் பல இடங்களில் அர்ப்பணிப்புடன் சிறப்பான இறைபணி ஆற்றியிருக்கின்றார். குறிப்பாக இவர் 1991ம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு புதுக்குடியிருப்பு, மானிப்பாய் ஆகிய பங்குகளில் உதவிப்பங்குத்தந்தையாக சிறப்பான பணியாற்றியிருக்கின்றார். மேலும் தாளையடி, புதுக்குடியிருப்பு, பாசையூர் ஆகிய பங்குகளினுடைய பங்குத்தந்தையாக பொறுப்புணர்வோடு மந்தைகளை அறிந்து, நேசித்த நல்ல ஆயனாக சேவையாற்றியுள்ளார்.

இவர் தமது குருத்துவ வாழ்வின் சில பகுதியினை மனித முன்னேற்றச் செயற்பாடுகளில் செலவிட்டு ஏழை எளிய மக்களின் துயர் துடைத்தவராவார். யாழ்ப்பாணம் மற்றும் வன்னி கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் இயக்குநராக அர்ப்பணிப்போடு செயற்பட்டுள்ளார். இவர் தனது குருத்துவ வாழ்வில் இயேசுவின் இறையாட்சிப் பணியினை சிறப்புடன் ஆற்றி வந்துள்ளார். இவரது பணியினை பெற்ற மக்கள் இவரை இன்றும் மறக்காது அன்புடன் நினைவுகூருகின்றனர். எளிமையான, அமைதியான குணம் கொண்டவராகி இன்முகத்துடன் அனைவரையும் அரவணைத்து பணிபுரிந்துள்ளார். மக்களோடு மட்டுமல்ல எல்லாக் குருக்களோடும் பண்பாக, அன்பாக பழகும் நல் உள்ளம் கொண்டவராகவும், அனைவராலும் மதிக்கப்படுகின்ற குருவாகவும் திகழ்கின்றார். இறைவனின் திராட்சைத் தோட்டத்தில் இறைபணியாற்ற இறைவன் இவருக்குத் தேவையான உடல் சுகத்தையும், ஆன்மீக பலத்தையும் கொடுத்து வழிநடத்தவும் இவரது எதிர்காலப் பணி சிறக்கவும் இறையருள் வேண்டி ஆசிகளை கூறி வாழ்த்துகிறேன்

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**
முன்னைநாள் ஆயர்,
யாழ்மறைமாவட்டம்

# குரு முதல்வரின் ஆசிச் செய்தி



## மறைமாவட்டப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து தன்னால் இயன்ற பங்களிப்பைச் செய்பவர்

தனது குருப்பட்ட அபிஷேக வெள்ளி விழாவைக் கொண்டாடும் அருட்தந்தை ஏ. ஜே. யாவிஸ் அடிகளாரை இறை ஆசீர் வேண்டி நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

எமது மறைமாவட்டத்தின் ஒரு துடிப்புள்ள குருவாக பல பொறுப்பான பணிகளை பிரமாணிக்கத்தோடு ஏற்று நிறைவேற்றி எல்லோராலும் மதிக்கப்படுகின்ற ஒருவராக அருட்தந்தை அவர்கள் திகழ்கிறார். நிர்வாகத்திறன், அடுத்தவரை மதிக்கும் பண்பு, இறைமக்கள் மத்தியில் அன்பும் இரக்கமும் காட்டுதல், மறைமாவட்டப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து தன்னால் இயன்ற பங்களிப்பைச் செய்தல் போன்ற நற்பண்புகளைக் கொண்டவராக கடந்த 25 ஆண்டுகள் இவர் ஆற்றிய சேவைகளுக்காக இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்.

தனது குருத்துவப் பணியை உதவிப் பங்குத் தந்தையாக என்னோடு ஆரம்பித்த காலம் முதல் இன்று வரை இவரது பாசமான உடனிருப்பு எனக்கு பலத்தையும் ஆதரவையும் தந்து துணையாயிருக்கிறது என்பதை இவ்வேளையில் ஏற்றுக்கொண்டு இச்சந்தர்ப்பத்தில் அடிகளாருக்கு என் நன்றியையும் அன்பையும் தெரிவிக்கின்றேன்.

குருக்களின் தோழமையை எப்போதும் விரும்புவராகவும், அவர்களுக்கு நல் ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டுபவராகவும் இவர் திகழ்கின்றார். மொத்தத்தில் அருத்தந்தை யாவிஸ் அடிகளார் எமது மறைமாவட்டத்திற்குக் கிடைத்த ஒரு பெரிய பொக்கிஷமாக தனது 25 வருட குருத்துவபணிவாழ்வை நிறைவு செய்யும் இத்தருணத்தில் இவரோடு இணைந்து இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

இறைவன் தொடர்ந்தும் பல்லாண்டுகள் இவரை ஆசீர்வதிக்கவும் நல் ஆரோக்கியத்தோடும் அமைதியோடும் இறைபணி ஆற்றவும் வரமளிக்கவேண்டுமென்று மன்றாடுகிறேன்.

அருட்தந்தை ப. யோ. ஜெயரட்ணம்
குரு முதல்வர்

# 'செடெக்' தேசிய நிலைய முன்னாள் இயக்குநரின் வாழ்த்துச் செய்தி



தாயின் கருவில் இருந்தே அருட்தந்தை யாவிஸ் அடிகளாரை இறைவன் தேர்ந்தெடுத்தார் என்பதை அவருடனான எனது அனுபவ நாட்களை வைத்து இவ் வெண்தாளில் பதிவு செய்து கொள்கின்றேன். ஆயிரம் ஆண்டுகளை நாம் ஆயுளாகப் பெற்றாலும் குருவாக ஒரு நாள் இருப்பதே ஆன்மாவின் மகிழ்ச்சியாகும். அந்த வகையில் குருவாக 25 வருடங்கள் என்பது இவருக்கு இறைவன் கொடுத்த இன்ப துன்பங்களின் ஒரு அனுபவ சொத்தாகும். போரையும் போரின் வடுக்களையும் சுமந்து நிற்கும் இந்த 25 வருடங்கள் உண்மையாகவே தியாகத்தை கற்கவும் வாழவும் இவருக்கு கிடைத்த பாக்கியம் என்பதில் ஐயமில்லை. ஊரை, உறவை இழந்து நிர்க்கதியான மக்களுக்கான மீள்கட்டுமானப் பணிகளில் கியூடெக் நிறுவன இயக்குனராக இவரின் உழைப்பு, அரவணைப்பு, கண்ணீர் துடைப்பு இவை போன்ற இன்னும் பல பண்புகள் இவரை ஒரு உன்னத சமூக ஆன்மீகவாதியாக வளர்த்துக் கொண்டது.


தன் தாயின் இழப்பு இன்னும் அதிகமாய் இவரைப் புடமிட்டதை இவர் ஆன்மீகத்திலும் பணியிலும் கண்டு கொண்டேன். கரித்தாஸ் தேசிய நிறுவன இயக்குனராக இருந்து இவருடன் பணி செய்த கடந்த ஆண்டுகளில் பல பாடங்கள், பண்புகள் மாத்திரம் அல்ல அவரின் புன்சிரிப்பின் பலத்தையும் கூட கற்றுக்கொள்ள எனக்கு வாய்ப்பாக இருந்தது. சிந்தனைத் தெளிவு, கருத்தாழம், பழகும்பண்பு, தியாகம், ஆன்மீகம் இவையெல்லாம் இன்னும் பல 25 ஆண்டுகள் இவருடன் பயணிக்க வாழ்த்துகின்றேன்.

கருவில் பொறுத்து
உருவில் கறுத்து - தன்னை
திருவில் நிறுத்தி
தெருவில் களைத்த "யாவிசை"
"ஆன்மீக கிறுக்கன்" என
நான் செல்லமாய் வாழ்த்துகின்றேன்.

நன்றி.

அன்புடன்
**அருள்பணி. ஜோர்ஜ் சிகாமணி**
முன்னாள் இயக்குநர்
தேசிய நிலையம்
சேடெக்

# About Rev. Fr. Arulanatham J. Yavis



- Rev. Fr. Arulanandam Johnaly Yavis
- St. John's Parish, Chundikuli, Jaffna.
- Parents - Mr. Philip Arulanantham
  Solomon Theresammah
  2 Sisters and 2 Brothers, 3rd son
- Date of Birth - 25.05.1965

## Education

- St. John Bosco Vidiyalayam, Jaffna
  St.patrick's College, Jaffna
- Joined St. Martin's seminary 1981
- Joined Major Seminary St. Francis Xavier's Seminary, 1983
- Ordained to priesthood - 30.07.1991
- MA in Pastoral Theology
  Franciscan University, Steubenville, OH, USA

## MISSIONS

- 1991 - 1993 - Asst. Parish Priest - Puthukudiyiruppu
- 1993 - 1995 - Asst. Parish Priest - Manipay
- 1995 - 1998 - Parish Priest - Thalaiyady
- 1998 - 2002 - Parish Priest - Puthukudiyiruppu
- 2002 - 2005 - USA
- 2005 - 2007 - Caritas - Killinochi
- 2007 - 2009 - Parish Priest - Pasaiyoor
- 2010 - 2014 - Caritas - HudecVanni,
  Dean Kilinochchi, Mullaithevu
- 2014 - 2016 - Caritas - Jaffna
- 2016 -up to date - Parish Priest - Point Pedro
  Dean, Point Pedro Deanary

# அருள்பணி அருளானந்தம் யாவிஸ்
## சில விபரங்கள்



- அருள்பணி. அருளானந்தம் ஜொனாலி யாவிஸ்
- புனித யுவானியார் பங்கு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்

- பெற்றோர்கள் : திரு. பிலிப் அருளானந்தம்
  சொலமன் திரேசம்மா
  இரண்டு சகோதரிகளும் இரண்டு சகோதரர்களும்
  இவர் மூன்றாவது மகன்.

- பிறந்த திகதி : 25.05.1965

### கல்வி

- புனித டொன் பொஸ்கோ மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்
- தூய பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்
- தூய மடுத்தினார் சிறிய குருமடம் 1981
- தூய சவேரியார் உயர் குருத்துவ கல்லூரி 1983
- குருத்துவ திருநிலைப்படுத்தல் 1991.07.30
- மேய்ப்புப்பணி இறையியலில் முதுகலைமாணிப்பட்டம்
  பிரான்சிஸ்கன் பல்கலைக்கழகம், ஸ்ரபன்வில், ஐக்கிய அமெரிக்கா

### பணித்தளங்கள்

| | |
|---|---|
| 1991 - 1993 | - உதவிப் பங்குக்குரு புதுக்குடியிருப்பு |
| 1993 - 1995 | - உதவிப் பங்குக்குரு மானிப்பாய் |
| 1995 - 1998 | - பங்குத்தந்தை தாளையடி |
| 1998 - 2002 | - பங்குத்தந்தை புதுக்குடியிருப்பு |
| 2002 - 2005 | - ஐக்கிய அமெரிக்கா |
| 2005 - 2007 | - கரித்தாஸ், கிளிநொச்சி |
| 2007 - 2009 | - பங்குத்தந்தை பாசையூர் |
| 2010 - 2014 | - கரித்தாஸ், கியூடெக் வன்னி,<br>மறைக்கோட்ட முதல்வர் கிளி/முல்லை மறைக்கோட்டம் |
| 2014 - 2016 | - கரித்தாஸ்/கியூடெக், யாழ்ப்பாணம் |
| 2016 - இன்றுவரை | - பங்குத்தந்தை பருத்தித்துறை,<br>மறைக்கோட்ட முதல்வர், பருத்தித்துறை மறைக்கோட்டம் |

# இதயம் திறந்து சொல்கிறார்கள்...

"அருட்தந்தை யாவிஸ் எனது நீண்டநாள் நண்பன். வஞ்சகம், கள்ளம், கபடம் இல்லாத ஒருவர் எல்லாரையும் சமாளித்துக் கொண்டு செல்லக் கூடியவர். எல்லாரோடும் சகஜமாகப் பழகக் கூடியவர் உறவுகளை வளர்ப்பது இவருக்குரிய தனித்துவம்"

அருள்பணி. J. B. அன்ரனிதாஸ்

"அருட்தந்தை யாவிஸ் அடிகளாரும் அவருடைய பெற்றோரும் சகோதரங்களும் மிகவும் அன்பானவர்கள். எல்லோரிடமும் அன்பாக பழகுவார்கள் எதை சொல்வதென்றாலும் தன்மையாக உரையாடுவது அவரது சிறப்பான பண்புகளில் ஒன்று"

நித்திலா மரியாம்பிள்ளை

"மனித மாண்பு மதிக்கப்படுவதில் கூடிய அக்கறை கொண்டவர். அனைவரையும் சமமாக மதிப்பதுடன் அடுத்தவர் புண்படாத வகையில் தனது தொடர்புகளைப் பேணிக் கொள்வார்"

திரு. இ. ஆ. திலகரட்ணம்

"ஒரே நேரத்தில் பல விடயங்களை அவதானித்து கொண்டு இருப்பார். வலுவிழந்தவர்கள், தேவையில் இருப்பவர்களின் தேவைகளை உள்ளத்தால் உணர்ந்து கொண்டு உதவி செய்பவர். எதற்கும் பயப்படாமல் திட்டமிட்டு சாந்தமாக காரியங்களை சாதிப்பவர். அவரின் முகத்தில் சாந்த குணம் எப்போதும் இருக்கும் எல்லாரையும் கவரக் கூடியவர். இரகசியம் காப்பதில் மிகவும் கவனமுடையவர்".

அருட்சகோதரி. யசிந்தா ராணி

# இதயம் திறந்து சொல்கிறார்கள்...

"எல்லோரையும் அன்பு செய்பவர். கருணை, இரக்கம், பொறுமையுள்ளவர். எல்லோருக்கும் எல்லாமாக இருப்பவர்".

அருட்சகோதரி. லூயிஸ் மேரி

"அருட்தந்தை யாவிஸ் எல்லா மக்களாலேயும் அன்பு செய்யப்படக் கூடியவர். அனைவரோடும் நேரம் ஒதுக்கி உரையாடுபவர். மிகவும் கரிசனை உள்ள குருவானவர்."

–அருள்பணி. கான்ஸ்போவர்

"Fr. Yavis is very close to me for the last forty years. He is very gentle and kind hearted. Priests' friend"

அருள்பணி. இயூஜின் பிரான்சிஸ்

"அமைதியானவர். மற்றவரை கவரக்கூடியவர் மகிழ்ச்சியிலும் துக்கத்திலும் அலட்டிக் கொள்ளாது சமநிலை பேணும் ஆளுமை உள்ளவர்"

எம். பத்மா

"புன்சிரிப்பும் மெதுவான நடையும் கனிவான குரலுமாக தன் பணியை நிறைவேற்றும் பணியாளன். பழகும் தருணங்களெல்லாம் சகோதர உறவோடு எம்மை அணுகும் இவர் எம் குடும்பத்தில் ஒருவர்"

திருமதி. கெனத் ரஜனி, செம்பியன்பற்று

"மனிதத்துவத்தை மதிக்கும் மதிநுட்பத்தாலும், புன்னகை மிக்க ஆளிடைத் தொடர்பாலும், ஆன்மீக வழிப்படுத்தலாலும் ஊழியர் நாம் வினைத்திறனுடன் செயலாற்ற உளமறிந்து செயற்பட்ட சிறந்த இயக்குநர்"

யே. லக்ஸ்டன்

# இதயம் திறந்து சொல்கிறார்கள்...

"இவர் ஓர்
அருமையான மனிதர்.
அமைதியானவர்
எந்த வினாவுக்கும் சரியான
விடையும் ஆலோசனையும்
தருவார். மிகமிக அனுதாபத்தோடு
மற்றவர்களை அணுகுவார்"

**திரு. பவானந்தி
வைத்தியர்**

"அருட்பணி யாவிஸ் குருக்களோடும் அவர்களுடைய குடும்பங்களோடும் தன்னோடு அறிமுகமானவர்களோடும் அவர்களின் இன்ப துன்பங்களில் கலந்து கொள்பவர். சூழ்நிலைக்கு ஏற்றவகையில் தன்னை ஈடுபடுத்திச் செயலாற்றக் கூடியவர்."

**– அருள்பணி. வின்சென்ட்**

"பணியாளரை தட்டிக்கொடுத்து பண்யை முன்னெடுப்பவர். எந்தவித பாகுபாடுமின்றி அனைவருடனும் சரளமாக பழகுபவர். பிரச்சினைகளை சலனமின்றி எதிர்கொண்டு தீர்த்து வைப்பவர். வளங்களை தேடிப்பெற்று வழங்குபவர்"

**சாள்ஸ் அங்கிள்**

"அருட்சகோதரராக, உதவிக்குருவாக, பங்குத் தந்தையாக 10 ஆண்டுகள் வரை புதுக்குடியிருப்பு பங்கில் பணியாற்றியுள்ளார். மக்களுக்குள் இறங்கி அவர்களை அறிந்து, அன்பு செய்த ஒரு பணியாளன். ஏழை எளிய மக்கள் பலருக்கு கைகொடுத்த ஒரு தெய்வம் என அவரைக் கூறலாம்"

**மரியான் சூசைமுத்து,
புதுக்குடியிருப்பு.**

"அக்கறையும் கரிசனையும் உள்ளவர்
அன்பாக நடப்பார். எப்போதும் கோபித்து கதைக்கமாட்டார். ஆலோசனைகள் கூறி அக்கறையோடு வழிநடத்துவார்"

**திருமதி. கனியூட் கெலன்
பாசையூர்**

"அர்ப்பண வாழ்வுக்கு அர்த்தம் காண பணிவாழ்வில் பல தளங்களில் நின்று துயர்களையும் தூய பணிகளாகவே நல்லுறவாடி பலருடைய மனங்களிலே நின்று நிலைப்பவர்"

**திரு. யோசப் பாலா
செயலர், கத்தோலிக்க கலை இலக்கியவட்டம்**

எல்லாரையும் பற்றி நல்ல மனப்பதிவுகளை வைத்திருக்கின்றார். தற்பெருமை இல்லாத ஒருவர். நல்ல முறையில் வரவேற்று மரியாதை செலுத்தி உபசரிப்பவர்.

**அருட்சகோதரி. சிப்ரியன்**

# இதயம் திறந்து சொல்கிறார்கள்...

சிரித்த முகமும், கனிவான பார்வையும், அக்கறையான செயற்பாடும் கொண்டவர், எமது சமூகத்தின் மத்தியிலே வளர்ச்சியையும் ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தியவர். அன்பும் பாசமும் கொண்ட பங்குத்தந்தையாக இருந்தார். எப்போது சந்தித்தாலும் இன்முகத்தோடு நலம் விசாரிக்கும் ஓர் அன்பான அருட்தந்தை"

**திரு. அலெக்ஸாண்டர்**
தலைவர், கடற்தொழிலாளர் சங்கம், பாசையூர்

"எவரையும் மனம் நோகச் செய்யமாட்டார். விடயங்களை அவதானித்து சொல்ல வேண்டிய விடயங்களை சொல்ல வேண்டிய நேரத்தில் பக்குவமாய் எடுத்துரைப்பார். எல்லாரையும் ஒன்றிணைத்து செயற்பட்டு வளர உதவி செய்வார். மிகவும் எளிமையானவர்".

–அருட்சகோதரி. மலர்

"அவரோடு நான் பழகிய வகையில் அவர் எதனையும் வெளிப்படையாகவும் அன்பாகவும் அணுகுவதைக் கண்கூடாகக் கண்டு கொண்டேன். குறிப்பாகக் கஷ்டப் பிரதேசங்களில் துணிந்து பணி புரிவதுடன், தயக்கத்துடன் செல்லும் எமக்கு வழிகாட்டுவதில் தயங்காத தன்னிகரற்ற வழிகாட்டி எவ்வித சிக்கலையும் ஒரு புன்சிரிப்புடன் சமாளித்து விடும் தீர்க்கதரிசி".

**பரிபூரணம். கில்பேட் துரைரட்ணம்**

"யாழ்ப்பாணத்திலும் வன்னி மண்ணிலும் அடிகளாரின் அர்ப்பணிப்பு நிறைந்த பணியை நான் கண்டிருக்கிறேன். ஏழைகள் பால் பரிவும் எல்லோரையும் அரவணைக்கின்ற கரத்தையும் அணு குமுறையில் அமைதியையும் சொல்லாடலில் மென்மையையும் நான் அவதானித்திருக்கிறேன். தந்தை அவர்கள் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தையை அன்பு செய்து பணியாற்றியவர். அதே போல் இறைமக்களும் இவர் பால் அன்புள்ளம் கொண்டவர்களாய் இருக்கின்றார்கள்".

– அருள்பணி. றெக்னோ

"அருட்தந்தை யாவிஸ் எளிமையான அன்புள்ளம் கொண்ட, மக்கள் மனங்களைக் கவரக்கூடிய ஒரு குருவானவர். கஷ்டமான காலங்களில் திறமையாக தனது பணியை ஆற்றி சேவை செய்தவர். சிறப்பாக மனித முன்னேற்ற நிறுவனத்தில் மனித நேயப்பணிகளை சிறப்புடன் ஆற்றியவர். இறையருள் பெற்று நீண்டகாலம் பணி செய்ய வாழ்த்துகிறோம்.

– மறையாசிரியர் ஜெயசீலன்

# இதயம் திறந்து சொல்கிறார்கள்...

கிளி/முல்லை கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் இயக்குநராக பணியாற்றிய காலத்தில், அவருடைய வழிகாட்டலில் உதவி இயக்குநராக பணிசெய்தவன் என்ற வகையில் அவரிடமிருந்து பல வழிகாட்டல் களையும், அனுபவங்களையும் நான் பெற்றுக் கொண்டேன். எனது குருத்துவ பணி வாழ்வின் வளர்ச்சியில் இவரினுடைய வழிநடத்தல்களும், ஆலோசனைகளும் பெரும் பங்கு வகிக்கின்றன. பணிகளின் நிமித்தம் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களில் தனித்துவமான, சுதந்திரமான முடிவுகளை எடுத்துக் கொள்வதற்கு பக்கபலமாக இருந்து வழிநடத்திய சந்தர்ப்பங்களை நான் நினைத்து பார்க்கின்றேன். இன்னும் குருக்களை அதிகம் அன்பு செய்கின்றவராகவும் அவர்களின் எந்த தளர்ச்சிகளிலும், சோர்வுகளிலும் குழப்பங்களிலும் தாமாகவே முன்வந்து நேரத்தை கருத்தில் கொள்ளாது, இருந்து செயற்படுகின்ற ஒரு சிறந்த குருவானவர்.

–அருள்பணி. கனிசியஸ்

"அருட்தந்தை யாவிஸ் மிகவும் இரக்க குணமும், பிறருக்கு உதவும் மனப்பான்மையும் உள்ள ஒருவர். பிறரின் மனதைப் புண்படுத்தக்கூடாது என்பதில் விழிப்பாய் இருப்பவர். பிறரை ஆழமாகப் புரிந்து கொள்ளும் ஆற்றல் உள்ளவர். பிரச்சினைகள் எழும்போது சுமுகமாகப் பேசித் தீர்க்கும் மனப்பக்குவம் உள்ளவர். ஆயர்களோடும், குருக்களோடும் சுமுகமாகப் பழகுவதால் பலராலும் விரும்பப்படுகிறவர். நிறுவனமோ, பங்கோ எதுவாக இருந்தாலும் அதனை அர்ப்பணிப்போடு நல்ல முறையில் நிர்வகிக்கும் தன்மையுள்ளவர். ஆன்மீகம், ஒப்புரவு அருட்சாதனம் என்பவற்றில் அதீத அக்கறை கொண்டு இருப்பதோடு ஒப்புரவு அருட்சாதனம் வழங்குகின்ற நல்லதொரு குருவாகவும் விளங்குகின்றார்."

அருள்பணி. சு. ஸ்ராலின்.

" இவருடைய பணிக்காலத்தில் 25 செயற்திட்டங்கள் நடைபெற்றன. 1000க்கு மேற்பட்ட வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. வாழ்வாதார உதவிகள் கல்வி உதவிகள் வழங்கப்பட்டன. இத்தனை செயற்பாடுகளையும் கிளி/முல்லை கரித்தாஸ் நிறைவேற்றிக் கொடுக்க காரணமாக இருந்தது அருள்பணி யாவிஸ் அடிகளாரின் ஒருங்கிணைக்கும் ஆற்றல். 65 பணியாளர்கள் இருந்தோம். ஒவ்வொருவரையும் அறிந்து அவர்கள் பிரச்சினைகளை தெரிந்து அன்போடு வழிநடத்துவார். சலிப்பு களைப்பு இல்லாத அவரது அன்பான முன்னுதாரணமான பணியும் வழிகாட்டலுமே இப்பெரும் பணிகளை நிறைவேற்ற காரணமாய் அமைந்தது."

– திருமதி ரவீந்திரன் நேசநந்தினி
நிர்வாக உத்தியோகத்தர்

# இதயம் திறந்து சொல்கிறார்கள்...

"தனது செயற்பாடுகளில்
மென்மையான போக்கை
கடைப்பிடிப்பவர். இருப்பினும் தாம்
மேற்கொள்ளும் பணிகளின் பயன்கள்.
விளைவுகள் மிக உன்னதமானதாக
இருக்க வேுண்டும் என்பதில்
உறுதியாக இருப்பவர்"

– விக்னேஸ்வரன்

"விருந்தோம்பல் பண்பு, நேரகாலம் பார்க்காது பணியாற்றும் பண்பு, பணியாளர்களுடன் சுமூகமான உறவு நிலை நல்லதோர் ஆற்றுப்படுத்தும் பண்பு, நுட்பமாக பிரச்சினைகளை அணுகுவது; இவை அவரின் சிறப்பு"

– செ. திருச்செல்வன் [மூனேஸ்]

"இவர்

- மனித நேயத்தைப் புரிந்து கொண்ட ஒரு பணியாளன்.
- சமூகப் பணியையும் ஆன்மீகப் பணியையும் இணைத்து சேவை செய்த ஒரு இறைபணியாளன்.
- மற்றவர்களுடைய ஆற்றல்களைப் புரிந்து, அவர்களை வெளிக்கொணர்ந்து மதிப்பளிக்கத் தெரிந்த ஒரு தொண்டன்"

– தேவா செடெக்

# ஆண்டவரின் நற்குருவே வாழ்க

பால் கறைகள் போக்கிடவே
யாழ் மறை பூங்காவிலே
இருள் பிணியை நீக்கிடவே
அருட்பணியாற்றிட நீர் வந்தீர்.

எள்ளி நகையாடியோரையும் மாற்றி
வெள்ளி விழா நீர் கண்டீர்
அகில் பரப்பும் துகிலோடு நின்
அகமலரும் வெள்ளை ஐயா

ஆண்டவர் இயேசு பணியை என்றும்
தாண்டி நிற்கும் உமது பணி
புதுவையில் நீர் ஆற்றிய பணியது
ஊழி எது வரினும் நீங்கிட நிகர் இல்லை.

காலத்தால் அழியாத கல் ஆசனமே
நின் உரைகள் ஞாலத்தில் நலியாத பொற்சாசனமே

என் நகை நாம் பெற்றிடினும்
நின் புன்னகைக்கு ஈடாகாது குருவே
என்றும் உம் புனித வாழ்வு தொடர்ந்திட
இன்று நாம் இனிதே வாழ்த்தி நிற்கின்றோம்.



**திரு. திருமதி. அருளானந்தம் குடும்பம்**
புதுக்குடியிருப்பு

நனவிடை தோய்ந்து...

# நினைவுகள், உணர்வுகள், எண்ணங்கள்

## ஒரு நேர்காணல்

**1. கடந்த 25 ஆண்டு கால குருத்துவ பணி வாழ்வை திரும்பி பார்க்கும் போது ஏற்படும் உணர்வுகள் எவை?**



என்னுடைய தகுதியற்ற நிலையில் ஆண்டவர் என்னோடு இருந்து என் வாழ்வை பாதுகாத்து ஆசீர்வதித்துள்ளார். ஒரு நிறைவான நன்றியுணர்வு நிச்சயமாக நிறைந்துள்ளது. இறைவனின் அதிசயமான செயற்பாடுகள், அத்தோடு என்னுடைய பணி வாழ்வில் நான் சந்தித்த பல அற்புதமான மனிதர்களின் அன்பும், அரவணைப்பும் அளப்பரியது. ஆகவே நன்றியோடு கூடிய ஒரு மகிழ்வான உணர்வே நிறைந்துள்ளது.

**2. உங்கள் குருத்துவ அழைத்தல் வாழ்வில் உங்கள் பெற்றோர், சகோதரர்களின் பங்கு பற்றி கூறுங்கள்?**

நான் அவர்களுக்கு ஒரு பெறுமதியான செல்வமாகவே அவர்கள் என்னை அன்பு செய்தார்கள். அம்மா, அப்பா இருவரும் என்னை மிக மிக நேசித்தார்கள். அதே வேளையில் என்னிலே கண்டிப்பாகவும் நடந்து கொண்டார்கள். தங்களுக்கு பிடிக்காத செயல்களை என்னிடம் கூற தயங்கியது இல்லை. (விசேட விதமாக அம்மா) அம்மாவினுடைய இறுதிக்காலம் வரை நான் அம்மாவுக்கு குழந்தை தான். தலை இழுப்பதிலிருந்து சுத்தமான கசொக் போடுவது நன்றாக ஆயத்தப்படுத்திய பிரசங்கம் சொல்வது மட்டும் எனக்கு ஆலோசனை செய்து கொண்டே இருந்தார். அதே போல் என்னுடைய அப்பாவின் கடும் உழைப்பையும் பிள்ளைகள் மட்டிலான பாசமும் எதனையும் நடுநிலைநின்று சீர்தூக்கிப் பார்க்கும் பார்வையும் தொடர்ச்சியாக குடும்பத்தில் காட்டிய அக்கறையும் மனதில் பதிந்தவை. தங்களுடைய வருத்தங்கள், கஸ்ரங்களிலும் எனது வசதியையும், சந்தோசத்தையுமே அவர்கள் கவனித்தார்கள். எனது நல்வாழ்விற்காக தங்களையே தியாகம் செய்தார்கள்.

எனது சந்தோசமே அவர்களின் நோக்கம் என்பது போல எப்பொழுதுமே செயற்படுவார்கள். எனது சகோதரர்களான அக்கா, அண்ணா, தம்பி, தங்கை நான்கு பேரும் எனது வாழ்வை சிறப்பிக்க வேண்டும் என்பதிலே கவனமாக இருக்கின்றார்கள். கண்டிப்பாக கதைக்க வேண்டிய இடத்தில் கதைத்தே தீருவார்கள். மிகவும் நெருக்கமான அன்புறவு எம்மத்தியிலே உள்ளது. மிகவும் மரியாதையுடன் கூடிய அன்பிலே வாழுகின்றோம். அவர்களுக்கு நான் என்றும் செல்லப்பிள்ளை தான். அவர்களுடைய

அன்புக்கும், அக்கறைக்கும் நான் என்றும் கடமைப்பட்டவன். இப்படியான ஒரு பாச பிணைப்பு உள்ள குடும்பத்திலே வாழக் கிடைத்தது என் பெரும் பாக்கியமே.

### 3. **இந்தக் காலத்தில் நினைத்து நினைத்து மகிழும் சில நினைவுகள்?**

- கடந்த யுத்த காலத்தில் மக்களோடு வாழக் கிடைத்த சந்தர்ப்பம்.
- குருவாக நான் அழைப்பு பெற்றதனால் எனது குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டதை நான் உணர்ந் தேன். எனது அழைப்பே, எனது குடும்பத்தினருக்கு பெரிய ஆசீர்வாதமாக மாறியது.
- எனது இயலாமைகளிலே என்னோடு பயணித்த நண்பர்கள், அவர்களின் அரவணைப்பு, புரிந்து கொள்ளல், எனது சோர்விலே, தயக்கத்திலே உறுதி தந்த குருக்கள், நண்பர்கள்.
- அமெரிக்காவிற்கு படிப்பதற்கு பணி செய்வதற்கும் கிடைத்த சந்தர்ப்பம் - அமரிக்கர்களும் எவ்வளவு விசுவாசத்தில் ஆழமாக உள்ளார்கள். நல்ல விழுமியங்களை மதித்தார்கள், கலை, கலாச்சாரங்களையும் மதிக்கும் இயல்பு வியப்பு மிக்கதும், சந்தோசமுமான அனுபவம்.
- எனது பங்கு வாழ்க்கையிலே கஸ்ரமான, வசதி குறைவுகளோடு வாழும் சந்தர்ப்பங்களிலே எமது உருவாக்க காலத்தை நினைத்து மகிழ்ந்தது உண்டு. எனது உருவாக்கத்திலே பெரும் பங்காற்றிய பெற்றோர்களை நினைத்து பெருமைப்படுவதுண்டு. ஏனெனில் வறுமையான வசதி குறைவுக ளிலே தான் நாம் வாழ்ந்தோம். அத்தோடு குருத்துவ உருவாக்கத்திலே பெரும் பங்காற்றிய அருட் தந்தையர்கள் நீக்கிலாஸ், அன்ரன் மத்தாயஸ், பிலிப் பொன்னையா, எஸ். ஜே. இம்மானுவேல் காலத்தில் இவர்கள் என்னை உருவாக்கினார்கள்.

### 4. **உங்களை மிகவும் பாதித்த நினைவுகள் சில...?**

நான் கடந்து வந்த பணிக்காலம் பெரும்பாலும் கடும் போரின் மத்தியிலானதாக அமைந்திருந்தது. அதனால் நான் பணியாற்றிய பணித்தளங்களில் பல பாரிய உயிரிழப்புக்களைச் சந்திக்க நேர்ந்தது. உதாரணமாக நான் தாளையடிப் பங்குத்தந்தையாக இருந்தபோது நாகர் கோவில் பாடசாலை மாண வர்கள் மீதான விமானத் தாக்குதலின் அவலத்தை எதிர் கொள்ள நேர்ந்தது. புதுக்குடியிருப்பில் பணியாற் றிய போது மந்துவில், மாத்தளன் பகுதிகளில் நடைபெற்ற விமான குண்டு வீச்சில் பலியானவர்களை கண்டேன். செஞ்சோலை சிறுவர்கள் மீதான தாக்குதலும் என்னை மிகவும் சோகத்துக்குள்ளாக்கியது. பாசையூர் பங்கில் இருந்தபோது இரண்டு வீடுகள் ஷெல் வீச்சுக்குள்ளாகி பலர் மரணித்தனர். இந்த இழப்புக்களும் அவலங்களும் என்னில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

அதே போல என்னோடு ஒன்றாக குருத்துவ தோழமை வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்ட பல குருக்களை அவர்களது இளவயதிலேயே இழந்தது என்னைப் பெரிதும் பாதித்தது. அருட்தந்தை ஜோண் லொறட் எனது நெருங்கிய நண்பன், அருட்தந்தை பிரான்சிஸ் யோசவ் அருமையான வழிகாட்டியும் வாழ்வைப் பகிர்ந்தவருமாக எனது நெஞ்சுக்கு நெருக்கமானவர். அருள்பணி ஜிம்பிறவுண் குடும்பத்தி னரை நான் நெருக்கமாக அறிந்திருந்தேன். அது போல அருட்தந்தை சறத்ஜீவன், அருட்தந்தை பாக்கிய றஞ்சித் , அருட்தந்தை கருணாரட்ணம் இவர்களுடைய மரணங்கள் மிகுந்த கவலையைத் தந்தன.

மேலும் என்னை மிகவும் பாதித்தது எனது அம்மாவின் மரணம். என்னைச் செதுக்கி வளர்த்த அவரைப் பிரிந்தது பெரும் துன்பமாகவே இருந்தது. இருக்கிறது.

இன்னும் எத்தனையோ தியாகங்களோடு முன்னெடுக்கப்பட்ட ஒரு போராட்டம் முள்ளிவாய்க்காலில் அவலச்சுவையோடு முடிவுற்றதை எண்ணும் தோறும் இன்னும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு விடயமாகவே வினாக்களுடன் தொடர்கிறது.

**5. பணிக்காலத்தில் மறக்க முடியாத சில நினைவுகள்?**

- பங்கு மக்கள் என்னை மதித்து மிகவும் அன்பு செய்தார்கள்.
- ஏழ்மையான வாழ்வாக இருந்தாலும், பெரும்பாலான பங்கு மக்களில் இருந்த ஆழமான விசுவாச வாழ்வும் கிராமப் பற்றும்.
- வசதிகள் குறைந்த பங்குகளில் நீண்ட தூரங்கள் பயணம் செய்ய வேண்டிய இடங்களாக இருந்தது. ஆயினும் மகிழ்ச்சியாக செயல்பட்டோம். மக்களின் அன்பும், கரிசனையும், குருக்களின் தோழமையும் அதிகமாகவே இருந்தது.
- பங்குத்தளங்களிலே சந்தித்த மூப்பர்கள், தலைவர்கள், முதியோரின் ஆழமான விசுவாச உணர்வு. புதுக்குடியிருப்பில் புனித சூசையப்பரின் மேல் கொண்டிருந்த பக்தி. நோய் வந்தால் கோவிலில் வந்து படுப்பவர்கள் நோய் குணமாகி வீடு செல்வார்கள். புதுக்குடியிருப்பு பங்கிலே நான் பங்குத்தந்தையாக இருந்த காலம் மிக மிக கடினமான காலம். மிக பெரிய இடம்பெயர்வுகளின் காலம். புதுக்குடியிருப்பு வடக்கு, கிழக்கு அனைத்து மாவட்டங்களின் மக்களுக்கும் தஞ்சம் கொடுத்த பிரதேசம், புதுக்குடியிருப்பு மக்கள் எந்த விதமான மனச்சலிப்பும், பாகுபாடும் இல்லாமல் எல்லாரையும் அன்பாக ஏற்று, அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தார்கள். தங்கள் வீடுகள், காணிகள், உடமைகளை தாராளமாக பகிர்ந்து கொடுத்தார்கள். அந்த மக்கள் பாகுபாடுகளை மறந்து, நேரம் காலம் பாராது எல்லா வகையிலும் எல்லாருக்கும் நீண்ட காலமாக உதவியாக இருந்தார்கள்.
- மருதமடு மாதாவின் வன்னிப் பயணம் - புதுக்குடியிருப்பு பங்கிலே ஒரு இரவு தேவதாயின் திருச்சுரூபம் தங்கியது. அதற்கான ஆயத்தங்கள் மக்களின் வாழ்வுக்கு மாதாவின் வருகை எவ்வளவு ஆறுதலாகவும், அமைதியாகவும் இருந்தது. பங்கு மக்களின் கடினமான உழைப்பும், அனைவரது பங்களிப்பும் மிகவும் சிறப்பாக திட்டமிடப்பட்ட நிகழ்வாக நேர்ந்தது.
- புதுக்குடியிருப்பு பங்கிலே பணியாற்றிய போது அருட்பணி பிரான்சிஸ் யோசேப் உடன் மிக நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. கடுமையான அதிபராக அல்லாமல் மிக கரிசனையான தந்தையாக அவரைக் கண்டு கொண்டேன். அவரது தமிழ்ப்பற்று, நிர்வாகத் திறமையால் மிக மிக அமைதியாக இருந்து பெரிய காரியங்களை சாதித்துக் கொண்டிருந்தார். அவரோடு நாளாந்தம் நீண்ட நேரம் உரையாடினேன். தனது வாழ்வின் அனுபவங்களை அவர் பகிர்ந்து கொண்டார். அவர் தன் தாயை, தனது குருத்துவத்தை, தமிழ் மக்களை எவ்வளவு நேசித்தார் என்பதை அறியக் கூடியதாக இருந்தது. அவரது இழப்பு மிகப் பெரிய இழப்பாகவே தோன்றுகின்றது. அற்புதமான வியக்கத்தக்க ஆற்றல்கள், திறமை களைக் கொண்ட ஒரு குருவாவார். செம்பியன்பற்று தாளையடியில் அருட்தந்தை லொறற் அவர்களின் முதற் திருப்பலி, அவரது இறப்பு திருப்பலி ஆகிய இரண்டும் மக்கள் ஒரு குருவை எவ்வளவு ஆழமாக நேசிக்கின்றார்கள் என்பதை உணர்த்தியது. ஒரு குரு தனது வாழ்வினால் எவ்வளவு மக்களின் வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பது ஒரு ஆழமான அனுபவம். அவரது குறுகிய கால வாழ்வும், சிந்தனையும், பணியும் ஒரு குருவின் பணியையும் அவர் வாழ்வையும் சிறப்பாக சிந்திக்க எனக்கு துணை செய்த காலமாக கருதலாம்.
- பாசையூர் பங்கிலே புனித அந்தோனியார் மட்டில் எவ்வளவு அன்பாக இருக்கின்றார்கள் என்பதை

யும், ஆனி மாதம் என்றால் அவர்களின் மகிழ்வும், பக்தியும், முதலாம் திகதியிலிருந்து அதிகாலை வேளையில் குடும்பம் குடும்பமாக வந்து செபிப்பதையும், பரித்தியாகங்கள் செய்வதையும் அறிந்தேன். இது எனக்கு புதிய அனுபவமாக இருந்தது. அதிலும் சிறப்பாக பாசையூர் பங்கிலே வலயங்களைப் பிரித்து அன்பிய குழுமங்களை உருவாக்கி செயல்படத் திட்டமிட்டோம். அதன்படி செயல்பட்டதனால் பங்கிலே மக்களின் பங்களிப்பு அதிகமாக ஊக்குவிக்கப்பட்டது. பங்கின் நிர்வாக கட்டமைப்புக்கும், பங்கின் அனைத்து செயற்பாடுகளுக்கும் சிறிய குழுவாக செயற்படுவது எவ்வளவு இலகுவானது, சிறந்தது என்பதை காணக்கூடியதாக இருந்தது. அந்த நாட்களிலே அருட்பணி ரவிச்சந்திரன் அடிகளார் நாவாந்துறைப் பங்குத்தந்தையாக இருந்தார். அவரும் நாவாந்துறைப் பங்கிலே அன்பிய செயற்பாடுகளை சிறப்பாக செயற்படுத்தினார். அதுவும் உற்சாகமாக இருந்தது.

- கரித்தாஸ் வாழ்வு ஒரு சிறப்பான வாழ்வு. யுத்தத்தின் பின்னான பூமியாக இருந்தது. கடையிலே சாப்பாடு, மின்சாரம் இல்லை, கடுமையான இராணுவப் பாதுகாப்பு, மிக இறுக்கமான சட்டதிட்டங்கள், கட்டுப்பாடான நடமாட்டங்கள் இவைகள் மத்தியிலே புதிது புதிதாக வரும் மக்களுடன் பணி புரிந்தது ஒரு அற்புதமான அனுபவம். வேதனையும் விரக்தியுமான காட்சிகளாக இருந்தாலும் மனநிறைவுடன் பணி செய்தோம்.
- நிவாரண புனர்வாழ்வு பணியிலே ஈடுபட்ட போது எம் மூலம் மக்களுக்கு பணி செய்ய முன் வந்தவர்கள் உள் நாட்டு வெளி நாட்டு கொடையாளிகள் அவர்களின் உணர்வுகள் மனிதத்தை எவ்வளவு நேசித்தார்கள், அரசியல் பின்னணியை விட மனிதத்தை மனித துன்பத்தை இழப்பை எவ்வளவு புரிந்து கொண்டார்கள் என்பது ஒரு பெரிய அனுபவம்.
- இலங்கையின் ஆயர் சங்கத்தினரின் வருகையும், குடா நாட்டிலே உள்ள சில பங்குகள் பாதிக்கப்பட்ட பங்குகளை பொறுப்பெடுத்து செய்த உதவிகளும் மறக்கப்படமுடியாதவை.

### 6. 25 ஆண்டுகள் கடந்து விட்டது. அக்காலத்தில் செய்திருக்க வேண்டும். ஆனால் செய்யத் தவறிவிட்டேன் என கவலைப்படும் விடயங்கள்?

- அப்படியான பெரிய சாதனைகளை பற்றி நான் யோசிக்கவில்லை. எல்லா மக்களோடும் பாரபட்சம் இல்லாமல் நன்றாக பழக வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. அதை நான் செய்திருக்கின்றேன். குருக்களுடன் அன்பாக, மரியாதையாக, நல்லுறவுடன் வாழ வேண்டும் என்று விரும்புவேன். அதையும் செய்ய முயன்றுள்ளேன்.
- எனது குருத்துவ வாழ்வை இன்னும் அதிகமாக அர்ப்பணிப்புடன், எளிமையாக வாழ்ந்திருக்கலாம் என்று பல முறை எண்ணத் தோன்றியிருக்கின்றது.
- பங்குகளில் சிறிய குழும வாழ்வு, மக்களின் பங்கு வாழ்வில் பங்களிப்பு அதிகம் இருக்க வேண்டும், இருப்பதற்கு நான் உற்சாகமாக செயல்பட வேண்டும் என்று விரும்புகிறேன். அது பெரிதாக நிறைவேறவில்லை.
- குருத்துவ, துறவற வாழ்வுக்கான இளைஞர், யுவதிகளை அதிகமாக அடையாளம் காணவில்லை. அழைத்தலுக்கு இன்னும் அதிகம் ஊக்குவித்திருக்க வேண்டும்.

**7. யாழ் மறைமாவட்ட குருக்கள் குழாம் பற்றிய உங்களது உணர்வலைகள்?**

- உண்மையாகவே எனக்கு நிறைய சந்தோசமும், திருப்தியுமான உறவுகளை சந்திக்கும் இடமாகவே அது உள்ளது.
- திறமைகள், கெட்டித்தனங்கள், படைப்பாளிகள் உள்ள மிகச் சிறப்பான குழு. பெரும்பாலானவர்கள் மற்றவர்களை மதித்து நடப்பது, தட்டிக் கொடுப்பது போன்ற பண்புள்ளவர்கள். ஒரு சிறந்த உற்சாகமான குழுவோடு பணியாற்றுகின்றேன் என்று பெருமைப்படுவதுண்டு. அதிகமான சந்தர்ப்பங்கள் எல்லோருக்கும் கொடுக்கப்பட வேண்டும் என கருதுகின்றேன்.
- கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஒற்றுமையாக ஒருவர் ஒருவரை மதிப்பதை காணுகின்றேன். முரண்பாடுகள் வளர்க்கப்படாமல் சீர் செய்யும் சந்தர்ப்பங்களும் அதிகமுண்டு. மறைமாவட்டத்தை அன்பு செய்யும் குருக்களாக உள்ளார்கள்.
- ஆரோக்கியமான விமர்சனங்களை பகிர்ந்து கொள்ளுபவர்களாக உள்ளார்கள். இதுவே எமது பலமாக உள்ளது.

**8. எதிர்காலத்தில் செய்ய வேண்டும் என சிந்திக்கும் சில பணிகள்?**

- எமது மறைமாவட்டத்தின் சிறந்த வளர்ச்சிக்கு என்னாலான பங்களிப்பு செய்ய வேண்டும்.
- எமது மறைமாவட்டம் இன்னும் அதிகமாக மக்கள் மயமான செயற்பாடுகளை முன்னெடுக்க முன்னின்று உழைக்க வேண்டும்.
- மூத்த குருக்களை இன்னும் அக்கறையோடு கவனிக்க வேண்டும். கவனிக்கப்பட வேண்டும், அவர்களின் மகிழ்வுக்கு என்னால் முடிந்தவற்றை செய்ய வேண்டும்.
- அன்பிய குழும வாழ்வு முறையை எனது பங்குகளில் உயிரூட்டமானதாக செயற்பட முயற்சிகள் செய்ய வேண்டும்.
- சிறு சிறு குழுக்களின் ஊடாக சமூக மாற்றங்களை உருவாகுவதற்கு முயற்சிகள் செய்ய வேண்டும்.

> என்னுடைய தகுதியற்ற நிலையில் ஆண்டவர் என்னோடு இருந்து என் வாழ்வை பாதுகாத்து ஆசீர்வதித்துள்ளார். ஒரு நிறைவான நன்றியுணர்வு நிச்சயமாக நிறைந்துள்ளது. இறைவனின் அதிசயமான செயற்பாடுகள், அத்தோடு என்னுடைய பணி வாழ்வில் நான் சந்தித்த பல அற்புதமான மனிதர்களின் அன்பும், அரவணைப்பும் அளப்பரியது. ஆகவே நன்றியோடு கூடிய ஒரு மகிழ்வான உணர்வே நிறைந்துள்ளது.

# நெஞ்சம் கனக்கும் நினைவுகளுடன்

## அன்போடு

# அஞ்சலிக்கின்றேன்




**அருட்பணி. M. மேரி பஸ்ரியன்**

(மன்னார் மறைமாவட்டம்)

பிறப்பு : 11.12.1948 குருவாக : 25.04.1975

மறைவு 06.01.1985

இலங்கை இராணுவத்தால் வங்காலை தூய அன்னம்மாள் ஆலயக் குருமனையில் வைத்துச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.



**அருட்பணி. G.ஜோண் லொறற்**

(யாழ்ப்பாண மறைமாவட்டம்)

பிறப்பு : 10.10.1966 குருவாக : 23.02.1995

மறைவு : 01.01.1996

வலிகாமஇடப்பெயர்வின் போது மக்கள் பணியில் தன்னை இணைத்து சாவகச்சேரி, கச்சாய் பகுதியில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது 'செப்ரிசீமியா' காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு மரணமடைந்தார்.



**அருட்பணி. T.ஜிம்பிறவுண்**

(யாழ்ப்பாண மறைமாவட்டம்)

பிறப்பு : 04.06.1972 குருவாக : 29.04.2004

மறைவு 20.08.2006

அல்லைப்பிட்டி இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் தனது உதவியாளர் திரு. விமலதாசுடன் காணாமல் போனார்.



**அருட்பணி. M.X.கருணாரட்ணம்**

(யாழ்ப்பாண மறைமாவட்டம்)

பிறப்பு : 12.04.1951 குருவாக : 25.09.1989

மறைவு : 12.04.2008

வன்னிப்பகுதியில் உள்ள வவுனிக்குளம் அம்பாள் புரத்தில், ஆழ ஊடுருவும் படையினரால் நடாத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார்.



**அருட்பணி.** M.**பாக்கிய றஞ்சித்**

(மன்னார் மறைமாவட்டம்)

பிறப்பு : 11.06.1967 குருவாக : 17.12.1997

மறைவு : 26.09.2007

இயேசு சபை அகதிகள் பணி நிறுவனத்தின் மன்னார் மறைமாவட்ட இணைப்பாளராகப் பணியாற்றி, வன்னிப்பகுதியில் உள்ள தனது மக்களுக்குச் சேவையாற்றச் சென்றபோது, வெள்ளாங்குளம் - துணுக்காய் வீதியில் ஆழ ஊடுருவும் படையினரின் கிளைமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார்.



**அருட்பணி.** M.T. **சரத்ஜீவன்**

(யாழ்ப்பாண மறைமாவட்டம்)

பிறப்பு : 13.05.1968 குருவாக : 14.05.2003

மறைவு : 18.05.2009

முள்ளிவாய்க்கால் பகுதியில், இறுதிவரை மக்களுடன் பணியாற்றி, அவர்களின் அவலங்களை நேரடியாகப் பார்த்த மனச்சுமையுடன், அந்த இடத்தை விட்டு வெளியேறியபோது, இராணுவத்தால் தாக்கப்பட்டும், மருத்துவ உதவிகள் மறுக்கப்பட்டும், இரட்டைவாய்க்கால் பகுதியில் உள்ள சாளம்பன் என்ற இடத்தில் மரணத்தைத் தழுவிக்கொண்டவர்.



**அருட்பணி.** G.A. **பிரான்சிஸ் ஜோசப்**

(யாழ்ப்பாண மறைமாவட்டம்)

பிறப்பு : 30.09.1932 குருவாக : 21.12.1952

மறைவு : 18.05.2009

முள்ளிவாய்க்கால் யுத்தப் பிரதேசத்திலிருந்து வெளியேறி, முல்லைத்தீவு இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றபோது, இவரை அடையாளம் கண்ட போராளிகள் இவரின் துணையோடு இராணுவத்தில் சரணடைய முற்பட்டபோது, போராளிகளோடு சேர்த்து இவரும் இராணுவத்தால் அழைத்து செல்லப்பட்டுக் காணாமல்போனார்.

---

**இன்று நீங்கள் எம்மோடு இல்லையெனினும்**
**எமது நினைவுகளின் நீட்சியில்**
**என்றும் நிறையும் உங்கள் இருப்பு.**

---

# மறைமாவட்ட குருக்களின் 'லோக்கல்' குருத்துவம்

–அருள்பணி. ம.வி.இ. இரவிச்சந்திரன்

அருள்பணியாளர் யாவிஸ் அடிகளாரும் அவரோடு கூட தூய சவேரியார் குருத்துவக் கல்லூரியிலே உருவாக்கம் பெற்ற அருள்பணி யேசுரட்ணம், அருள்பணி ஜோர்ஜ், அருள்பணி பீற்றர், அருள்பணி மௌலிஸ் ஆகியோரும் பணிக்குருத்துவத்தின் வெள்ளிவிழாவை இன்று (30.07.2016) கொண்டாடு கிறார்கள். இவர்களோடு ஒன்றாக வாழ்ந்து மகிழ்ந்து உருவாக்கம் பெற்றவன் என்ற வகையில் இவர்கள தும், எனதும் எங்களைப் போல மறைமாவட்டத்திலே தமது பணிக்குருத்துவத்தை வாழத் தீர்மானித்துக் கொண்ட இன்னும் பல மறைமாவட்டக் குருக்களதும் குருத்துவ வாழ்வு பற்றிய சில சிந்தனைகளை ஒரு கட்டுரை வடிவில் இங்கு பதிவு செய்ய முனைகிறேன். துறவறத்தாரிடம் தான் அதிக ஆன்மீகம் உள்ளது. அவர்களுக்கு அவர்களது சபைக்குரிய ஆன்மீகம் உண்டு. ஆனால் மறைமாவட்டக் குருக்கள் தமக்கென ஆன்மீகம் இல்லாதவர்கள் ஒருவகையில் உலகுசார் (Secular Priests) குருக்கள் போன்ற கருத்துக்களை இன்றும் பலரிடம் காண முடிகிறது. இந்தப் பின்னணியில்தான் இக்கருத்துக்கள் பகிரப்படுகின்றன.

## தொடக்கத் திருச்சபையில் திருப்பணிகள்

தொடக்கத் திருச்சபையில் திருமுழுக்குப்பெற்ற அனைவருமே இறைமக்கள் என கருதப்பட்டனர். அவர்கள் 'கிளேறோஸ்' (Kleros) என அழைக்கப்பட்டனர். கிரேக்க மூலத்தின்படி இதற்கு 'தெரிவுசெய்யப் பட்டவர்கள்' என பொருள் கொள்ளலாம். அன்று திருநிலையினர் (Kleros) பொதுநிலையினர் (Laicos) என்ற வேறுபாடு இருக்கவில்லை. அனைவரும் ஓர் குலமாக தெரிந்தெடுக்கப்பட்ட மக்களாக கருதப்பட்ட னர். அவர்களிடம் சபையின் தேவைக்கென பல திருப்பணிகள் உருவாகிக் காணப்பட்டன. இறைவாக் குரைப்போர், தொண்டாற்றுவோர், கற்றுக்கொடுப்போர், ஊக்கமூட்டுவோர், தமக்குள்ளதை வழங்குவோர், தலைமை தாங்குவோர், இரக்கச் செயல்களில் ஈடுபடுவோர். (உரோ. 3,6-8) பிணிதீர்க்கும் ஆற்றல் பெற்றோர், வல்லசெயல்செய்வோர், தேர்ந்து தெளிவோர், பரவசப் பேச்சு பேசுவோர், அதனை விளக் குவோர் (1கொரி. 12,4-11) என பலவகையான திருப்பணிகள் தொடக்கத் திருச்சபையில் ஆற்றப்பட்டன. ஆவியானவரின் கொடைக்கேற்ப அவரவர் தத்தம் திருப்பணிகளை ஆற்றி திருச்சபைக்கு வலுச்சேர்ந்தனர்.

இத்தகைய திருப்பணிகளில் இரண்டு முக்கியமான வகைகளை றிச்சட் மக்பிரயின் என்பார் அடையா ளம் காண்கிறார். திருச்சபையின் மறைத்தூதுப்பணியை அடியிட்டு பிறந்த திருத்தூதர், இறைவாக்கினர், கற்றுக் கொடுப்போர் என்பது ஒருவகை, இவர்கள் நற்செய்தியை அறிவித்து திருச்சபைகளை நிறுவும் முன்னோடிப் பணிகளை ஆற்றி வந்தனர். ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட சபைகளை கண்காணித்து பரா மரித்து வழிநடத்தும் பணி இரண்டாவது வகை. இப்பணியில் மூப்பர்கள், கண்காணிப்பாளர்கள், திருத் தொண்டர்கள் ஆகியோர் இடம் பெற்றனர். (காண்க Richard P. Mc Brien. Catholicism, ப. 767)

உதாரணமாக திருத்தூதர் பவுலினுடைய குழுமங்களை எடுத்து நோக்கும் போது திருத்தூதர் பவுல் மேற்சொன்ன இருவகைப் பணிகளில் முதல் வகையைச் சேர்ந்தவர். ஒரு திருத்தூதர். அவர் சபைகளை ஏற்படுத்துகிறார். அதன் பின் தீத்து, திமோத்தேயு போன்றவர்களை அச்சபைகளின் கண்காணிப் பாளர்களாக நியமித்து பொறுப்புக்களை ஒப்படைத்து விட்டு தனது தூதுரைப் பணியை தொடர்ந்து

ஆற்றுவதற்காக புது இடங்களுக்கு புறப்படுகின்றார். தீத்து திமோத்தேயு போன்றவர்களிடம் எதிர்பார்க்கப் படும் திருப்பணிகள் இரண்டாவது வகையைச் சார்ந்தவை. அவர்கள் குறிப்பிட்ட சகைபளுக்கென தம்மை அர்ப்பணித்து அவற்றின் மேய்ப்புப்பணி அலுவல்களை பிரமாணிக்கத்தோடு கவனித்து அன்போடு வழிநடத்துவது இப்பணியில் ஈடுபடுவோரது கடமை. தீத்துவுக்கும் திமோத்தேயுவுக்கும் மேய்ப்புப்பணித் திருப்பணியில் ஈடுபடுவோரிடம் காணப்பட வேண்டிய தகைமைகள் பற்றி தமது மடலில் தூய பவுல் குறிப் பிடுகிறார். அவற்றுள் பல திருத்தூதர் பவுலிடமே காணப்படாதவை. ஆயினும் மேய்ப்புப்பணித்திருப்ப ணிக்கு அவசியமானவை. (இது பற்றிய சுவையான கருத்துக்களுக்கு Raymond Brown அவர்களுடைய Churches Apostles left Behind என்ற நூலின் முன்னுரைப் பகுதியை வாசிக்கவும்)

## தொடக்க திருச்சபையின் பின்னான வளர்ச்சி

தொடக்கத் திருச்சபையில் ஆற்றப்பட்ட பல்வேறு திருப்பணிகளில் முதன்மை பெற்றுக் காணப்பட்ட மேற்சொன்ன இருவகைத் திருப்பணிகளும் முன்னே வர ஏனைய திருப்பணிகள் இப்பணிநிலைகளோடு இணைந்து கொள்கின்றன. அல்லது வரலாற்றில் காணமல் போகின்றன. இப்பணியில் ஈடுபடுவோரைத் தவிர்ந்த ஏனையோர் பொதுநிலையினராக (laicos) திருச்சபையில் பார்வையாளராக மாறுகின்றனர்.

கால ஓட்டத்தில் இறைவாக்கினர், திருத்தூதர், கற்பிப்போர் என்ற முதல்வகைத் திருப்பணிகளும் மறைந்து போகின்றன. ஆனால் அந்தத் திருப்பணிகளை துறவிகள் ஆற்றத்தொடங்குகின்றனர். பிற்காலத் தில் திருச்சபையின் திருத்தூதுப்பணியை ஆற்றும் பணியாளராக துறவிகள் மிளிர்கின்றனர். காலத்துக்குக் காலம் தோன்றிய பல துறவற சபைகள் காலத்துக்குத்தேவையான பல முன்னோடிப் பணிகளை ஆற்றப் புறப்படுகின்றனர். அந்த வகையில் தொடக்கத் திருச்சபையில் காணப்பட்ட இறைவாக்கினர், திருத்தூதர்கள் கற்பிப்போரின் இன்றைய வழித்தோன்றல்களாக துறவிகளே கருதப்பட வேண்டும். இவர்கள் தமது திருத் தூதுப் பணிக்கேற்ற வாழ்க்கை முறையையும் ஆன்மீகத்தையும் வளர்த்துக் கொண்டனர்.

இரண்டாவது வகைத்திருப்பணிகளாக தொடக்கத்திருச்சபையில் காணப்பட்ட மூப்பர்கள், கண்காணிப் பாளர்கள், திருத்தொண்டர்கள் குறிப்பிட்ட தலத்திருச்சபையை பராமரிக்கும் ஆயர்களாக, குருக்களாக, திருத்தொண்டர்களாக இன்று தொடர்ந்தும் பணியாற்றுகின்றனர். ஒரு மறைமாவட்டக் குருவினுடைய அழைப்பு இந்த இரண்டாவது வகையாகிய மேய்ப்புப்பணி சார்ந்த அழைப்பாகும். இந்த அழைப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் அதற்குரிய வாழ்க்கை முறையையும் ஆன்மீகத்தையும் கட்டியெழுப்ப வேண் டும். ஆகவே மறைமாவட்டக் குருத்துவத்தின் ஆன்மீகம் என்பது அது சார்ந்த தலத்திருச்சபையின் சூழ்நிலை சார்ந்ததாகும். மண்ணோடும் மக்களோடும் அவர்களது இன்பதுன்பங்களாடும் இறுகப் பிணைந்ததாகவே அது இருக்க வேண்டும்.

## மறைமாவட்ட குருத்துவம் ஒரு 'லோக்கல்' (Local Priesthood) குருத்துவம்

அண்மையில் ஒரு மறைமாவட்ட குருவினுடைய குருத்துவ நினைவு நாளில் நான் மறையுரையாற்ற நேர்ந்தபோது இந்தக்கருத்தை வலியுறுத்தினேன். உள்ளூர் எனப் பொருள்படும் Local என்ற ஆங்கிலச் சொல்லை எமது மக்கள் 'தரமற்றது' என்ற பொருள்பட பயன்படுத்துவது வழக்கம். அதுபோலவே மறைமாவட்டக் குருத்துவத்தையும் தரம் குறைந்ததாக கருதுவோர் உண்டு. ஆனால் Local என்ற சொல் அதன் உண்மையான அர்த்தத்தில் வெளிப்படுத்தும் உள்ளூர் என்ற பொருளில் மறைமாவட்டக் குருத்து வத்தை புரிந்து கொள்வது மிகவும் சரியானதே. 'Local Church' எனத்திருச்சபையின் ஆவணங்கள் குறிப்பிடும் விடயத்தை தமிழில் தலத்திருச்சபை என்கிறோம். அடிப்படையில் மறைமாவட்டக் குருத்துவம் என்பது தலத்திருத்தசபையை (Local Church) கட்டியெழுப்புவதையே பணிநோக்காக கொண்டது. ஆகவே தான் எவ்வளவு தூரம் லோக்கலாக இருக்க முடியுமோ அவ்வளவு தூரம் லோக்கலாக இருப்பது

(உள்ளூர் மொழியில் சொன்னால் படு லோக்கலாக) மறைமாவட்டக் குருத்துவத்துக்கான அழைப்பு. மண்ணோடும் மக்களோடும் அவர்களின் இன்பதுன்பங்களில் இரண்டறக் கலந்து அவர்களது கண் ணீரையும் வியர்வையையும் இரத்தத்தையும் தமது பலியில் கலந்து தம்மையே பலியாக ஒப்புக்கொடுப் பதுதான் மறைமாவட்ட குருத்துவத்தின் அழைப்பும் ஆன்மீகமும். இந்தக் கருத்தில் இக்குருத்துவத்தை உலகுசார் குருத்துவம் என்று சொல்வதும் (Secular Priests) பொருத்தமானதே. (துறவிகள் போல வாக் குறுதிகளை வழங்கி ஆன்மீகத்தை வாழாமல் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு உலகபோக்கை அனுபவிக்க அனுமதிக்கப்பட்டவர்கள் என்ற கருத்து தவறானது) ஆகவே உலகுசார் நிலையும், உள்ளூர் நிலையும் அதனது உண்மையான அர்த்தத்தில் மறைமாவட்டக் குருத்துவதத்தின் சாரம் என்பதை ஒவ்வொரு மறைமாவட்டக் குருவும் மனம் கொள்ள வேண்டும்.

## புனித பவுலின் வழிகாட்டல்கள்

சபையின் மூப்பர்களாக, கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்படுவோரின் மேய்ப்புப்பணிக்கடமைகள் பற்றியும் அவர்களிடம் காணப்படவேண்டிய பண்புகள் பற்றியும் பவுல் அடிகளார் தெளிவான வழிகாட்டு தல்களை வழங்கியுள்ளார். மறைமாவட்டக் குருக்கள் தங்கள் ஆன்மீகத்தின் அடித்தளமாக பவுல் அடிகளா ரின் மேய்ப்புப்பணி மடல்களை கொள்வது மிகவும் பொருத்தமானது. குறைச் சொல்லுக்கு ஆளாகாதிருத் தல், அறிவுத்தெளிவு, கட்டுப்பாடு, விருந்தோம்பல், கற்பிக்கும் ஆற்றல், கனிந்த உள்ளம், குடிவெறிக்கும் வன்முறைக்கும் இடங்கொடாமை, பொருளாசையை தவிர்ப்பது, திருச்சபைக்கு வெளியே இருப்பவர்களின் நற்சான்று, இழிச் சொல்லுக்கு ஆளாகாமை, கண்ணியம், இரட்டை நாவின்மை, தூய மனச்சான்று போன்ற பண்புகள் இவர்களிடம் காணப்பட வேண்டும் என்று திமோத்தேயுவுக்கு எழுதிய முதல் மடலிலே பவுல் குறிப்பிடுகிறார்.

அதே மடலில் அவர்களின் பணிபற்றி பேசும் போது முதியோரிடம் கடுமையாய் இராதே அவர்களை தந்தையாய் மதித்து ஊக்குவி, இளைஞர்களை தம்பிகளாகவும் வயது முதிர்ந்த பெண்களை அன்னை யராகவும் இளம் பெண்களை தூய்மை நிறைந்த மனத்தோடு தங்கையராகவும் கருதி அறிவுரை கூறு. மறைநூலை படித்து காட்டி அறிவுரை வழங்கு, கைம்பெண்களுக்கு மதிப்பு கொடு, முன்கூட்டியே முடி வெடுக்காதே, நடுநிலை தவறாதே, பாவங்களில் பங்கு கொள்ளாதே போன்ற கருத்துக்களை வழங்கு கிறார்.

இன்னும் அவர்கள் தங்களுடைய தனிப்பட்ட ஆன்மீக வாழ்வைப் பொறுத்தவரை நீதி, இறைபற்று, நம்பிக்கை, மனஉறுதி, பணிவு ஆகியவற்றை நாடித் தேடுமாறும் விவாதங்களிலும் சொற்போர்களிலும் ஈடுபடவேண்டாம் என்றும் செல்வம் சேர்க்க முனையாமல் உடையோடும் உணவோடும் மனநிறைவு கொள்ளுமாறும், பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை ஆகியவற்றில் முன்மாதிரியாக விளங்கு மாறும் இயேசுவின் நல்ல தொண்டனாக இருக்குமாறும் அறிவுரை கூறுகிறார்.

மேற்சொன்னவை இம்மடல்களில் மேய்ப்புப்பணிகளில் அமர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்களுக்கு தூய பவுல் வழங்கும் அறிவுரைகளின் உதாரணமாகும். இன்னும் பல விடயங்களை இம்மேய்ப்புப்பணி மடல்களை ஆழமாக வாசித்து நாம் புரிந்து கொள்ளலாம். புனித பவுலின் கருத்துக்களை தொகுத்து நோக் கும்போது தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை அன்பு செய்து, அறிவூட்டி, நெறிப்படுத்தி வழிநடத்தும், அவர்களை ஒரு இறைமக்கள் சமூகமாக கட்டியெழுப்பும் பணியை நிறைவேற்றப் பணிக்கிறார் என்பது புலனாகிறது. ஆகவே குழுமத்தைக் கட்டியெழுப்பும் ஒரு பணிச்சூழலில்தான் ஒரு மறைமாவட்டக் குரு வின் வாழ்வும் ஆன்மீகமும் கருக்கொள்கிறது.

## இயேசு வழங்கும் மாதிரி

சாவகச்சேரிப் பங்கில் பங்குத்தந்தையாக இருந்தபோது குருவுக்கான பணிமனை ஒன்றை அமைக்கும் சந்தர்ப்பம் எனக்கு கிட்டியது. அமைத்த பின்பு அதன் முகப்பில் ஒரு படம் வைக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. அதற்கான படத்தை தெரிவு செய்த போது நான் ஒரு அழகிய நல்லாயன் படத்தைத் தெரிவு செய்தேன். ஏனெனில் ஒரு பங்குக் குரு பின்பற்ற வேண்டிய மாதிரி (model) நல்லாயனே என்பது எனது கருத்தாக இருந்தது.

யோவான் நற்செய்தியின் 10ம் அதிகாரத்திலே நானே நல்ல ஆயன் என்று குறிப்பிடும் இயேசு நல்லாயனின் சிறப்பியல்புகளை விபரிக்கிறார். நல்லாயன் தன் ஆடுகளை அறிவான். ஆடுகளும் அவனது குரலை அடையாளம் காணும். அவன் அவற்றை மேய்ச்சல் நிலங்களுக்கும் நிரோடைகளுக்கும் அழைத்துச் செல்வான். அவற்றை கட்டுப்போட்டு பராமரிப்பான். ஆபத்து வேளையில் ஓடிவிடமாட்டான். அவற்றிற்காக தன் உயிரையும் கொடுப்பான். தொலைந்து போன ஒரு ஆட்டையும் தேடிச் செல்வான். அவற்றை ஒன்றாகக் கூட்டிச் சேர்ப்பான். அன்போடு அவற்றை அரவணைத்து வழிநடத்துவான். இத்தகைய ஒரு நல்ல ஆயனே உண்மையான மேய்ப்பன் அவன் ஆற்றுவதே சரியான மேய்ப்புப்பணி.

மேய்ப்புப்பணித்திருப்பணியில் அமர்த்தப்பட்டு தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட தலத்திருச்சபையை (Local church) வழிநடத்தும் பொறுப்பை ஏற்கும் மறைமாவட்டக் குருத்துவத்தில் உள்ள ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்களும் நல்லாயனை தமது மாதிரியாகக் கொள்ள வேண்டும். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை நன்கு அறிந்து அவர்களை பராமரித்து கூட்டிச் சேர்த்து, அவர்களின் துயர் துடைத்து, தேவையேற்படும் போது அவர்களுக்காக உயிரையும் கொடுத்து வாழ்வதே இந்த மறைமாவட்ட குருத்துவ அழைப்பு. திருத்தந்தை பிரான்சிசினுடைய வார்த்தையில் ரத்தினச் சுருக்கமாக சொல்வதானால் அவர்களது மந்தையின் வாடை மேய்ப்பர்களில் வீச வேண்டும்.

## விடுதலை வேள்வியில்...

எமது மண்ணில் நிகழும் விடுதலை வேள்வியில் தமது மேய்ப்புப்பணி ஈடுபாட்டின் விளைவாக தம்மையே ஆகுதியாக்கிய அருள்பணியாளர்கள் பலர் மறைமாவட்ட குருக்களே.

கொல்லப்பட்டவர்களை தேடிப்புதைத்து அநீதியை எதிர்த்து நீதி கோரியதனாலே சுடப்பட்டு இறந்த மேரிபஸ்ரியன், இடம்பெயர்ந்த மக்களோடு இடம்பெயர்ந்து அவர்களின் முகாம் வாழ்க்கைச்சூழலைப் பகிர்ந்து அவர்களோடு நோய்த்தொற்றுக்கு ஆளாகி மருத்துவ வசதியின்றி மரணித்த ஜோண் லொறட், மனித உரிமைப்பணிகளில் ஈடுபட்டு கிளைமோர் தாக்குதலிற்கு இலக்கான கருணாரட்ணம், மனித நேயப்பணிக்காக சென்ற வேளை கிளைமோருக்கு பலியான பாக்கியரஞ்சித், மக்களோடு நின்று அவர்களது விடுதலைக்காக மன்றாடியதாலே காணாமல் போகச் செய்யப்பட்ட ஜிம்புறவுண், இறுதிப் போரின் இறுதிநாள்வரை மக்களோடு வாழ்ந்து பசியிலும் களைப்பிலும் கவலையிலும் உயிர்துறந்த சறத்ஜீவன், கடைசி வேளையிலும் போராளிகள் சரணடைய உதவியதால் அவர்களோடே காணாமல் ஆக்கப்பட்ட பிரான்சிஸ் யோசவ். இக்குருமணிகள் அனைவரும் தமது பலங்கள் பலவீனங்களோடு நல்லாயனின் வழிநின்று தமது மறைமாவட்டக் குருத்துவத்தை வாழ்ந்து முடித்தவர்களே.

அதேபோல எமது மறைமாவட்டத்தின் முதல் மறைமாவட்டக் குருவாகிய பிரான்சிஸ் சவுரிமுத்து தொடக்கம் வன்னிக்கிராமங்களில் முகமிழந்த மக்களுடன் தம்மைக் கரைத்து வாழ்ந்துவரும் இன்றைய இளம் குருக்கள்வரை பெயருமின்றி புகழுமின்றி தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தைகளுக்காக தம்மையே கரைத்துக் கொள்ளும் மறைமாவட்டக் குருக்கள் பலர் இருக்கின்றனர். இவர்களுக்கென ஒரு வாழ்வு முறையுண்டு. இவர்களுக்கென ஒரு ஆன்மீகம் உண்டு. அது நல்லாயனின் ஆன்மீகம். ஒருமேய்ப்புப்

பணி ஆன்மீகம். தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களுக்காக தன்னையே கையளிக்கும் ஒரு லோக்கல் (Local) ஆன்மீகம்.


## போரின் பின்னான காலம்

போரின் பின்னான இக்காலம் எமது மக்களை போரின் ஆறாத வடுக்களோடு அவமானமும் அவலங்களும் நிறைந்த ஒரு சூழலுக்குள் தள்ளியிருக்கிறது. உரிமைகள் மறுக்கப்பட்ட நிலை தொடரும் அதே வேளையில் வர்ணமயமான ஒரு மாய உலகுக்குள் நாம் தள்ளப்படுகிறோம். காணாமல் போனவர்களின் உறவுகள், சிறையில் வாடுபவர்கள், சித்திரவதைக் கூடங்களிலே அவலப்படுபவர்கள், காணிகளை இழந்திருப்போர் இவர்களின் அவலங்கள் இலகுவாக கடந்து போகப்படுகிறது. இராணுவ மயமாக்கல், பௌத்த மயமாக்கல் என்பன சாதாரணமானவையாக ஏற்கப்பட்டு இலகுவாக ஜீரணிக்கப்படுகின்றன. கிறிஸ்தவ வாழ்வு ஆலய கட்டுமானங்களுக்குள்ளும் புனரமைப்புக்குள்ளும் திருவிழாக் கொண்டாட்டங்களுக்குள்ளும் இந்தியாவிலிருந்து வருகை தருபவர்களுடைய வழிபாடுகளுக்குள்ளும் சுருக்கப்படுகிறது.

இந்நிலையில் மறைமாவட்டக் குருத்துவத்திற்கு ஒரு பாரிய ஆபத்து காத்திருக்கிறது. உலகமயமாகி வரும் போக்கில் அள்ளுண்டு நாமும் இன்றைய நவீன தொலைத்தொடர்பு இணையக் கலாச்சாரத்தில் மூழ்கிப்போகும் நிலை காணப்படுகிறது. மாயைகளையும் உண்மைகளையும் பகுத்தறிந்து சரியான திசையில் மக்களை வழிநடத்த வேண்டிய பணி காத்திருக்கிறது. இல்லாதுபோனால் சிங்கங்களிடமும், ஓநாய்களிடமும் மந்தைகளைப் பறி கொடுத்து விடும் போலி மேய்ப்பர்களாக நாம் மாறி விடுவோம். அது மட்டுமல்ல ஒருவேளை மந்தைகளையே மேயும் பொல்லாத ஆயன்களாகவும் மாறி விடுவோம்.


எனவே எம்மோடு ஒன்றாக வாழ்ந்து, மகிழ்ந்து உருவாக்கம் பெற்ற இக்குருக்களின் வெள்ளி விழாவை மகிழ்வோடு கொண்டாடும் மறைமாவட்டகுருக்களாகிய நாம் எமது மேய்ப்புப்பணிக்கான அழைப்பை மீள ஒருமுறை சிந்தித்துக் கொள்வோம். எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை அன்பு செய்து அவர்களை அறிந்து அவர்களை துன்ப வேளைகளில் தேற்றி, இன்ப வேளையில் அவர்களோடு மகிழ்ந்து தொலையும் போது தேடிச்சென்று பராமரித்து வழிகாட்டி அவர்களோடு வாழ்ந்து அவர்களுக்காகவே மரணிக்கும் எம்முடைய மேய்ப்புப்பணிசார் உள்ளூர் குருத்துவத்தின் தன்மையை (Local Priesthood) புரிந்து கொள்வோம். இயலுமானவரை Local ஆக வாழ முன்வருவோம்.

போரின் பின்னான இக்காலம் எமது மக்களை போரின் ஆறாத வடுக்களோடு அவமானமும் அவலங்களும் நிறைந்த ஒரு சூழலுக்குள் தள்ளியிருக்கிறது. உரிமைகள் மறுக்கப்பட்ட நிலை தொடரும் அதே வேளையில் வர்ணமயமான ஒரு மாய உலகுக்குள் நாம் தள்ளப்படுகிறோம். காணாமல் போனவர்களின் உறவுகள், சிறையில் வாடுபவர்கள், சித்திரவதைக் கூடங்களிலே அவலப்படுபவர்கள், காணிகளை இழந்திருப்போர் இவர்களின் அவலங்கள் இலகுவாக கடந்து போகப்படுகிறது. இராணுவ மயமாக்கல், பௌத்த மயமாக்கல் என்பன சாதாரணமானவையாக ஏற்கப்பட்டு இலகுவாக ஜீரணிக்கப்படுகின்றன. கிறிஸ்தவ வாழ்வு ஆலய கட்டுமானங்களுக்குள்ளும் புனரமைப்புக்குள்ளும் திருவிழாக் கொண்டாட்டங்களுக்குள்ளும் இந்தியாவிலிருந்து வருகை தருபவர்களுடைய வழிபாடுகளுக்குள்ளும் சுருக்கப்படுகிறது.





காலத்தின் தூரிகையில்...





# விசுவாசத்தின் இரு விழிகள்















நல்லதொரு குடும்பம்...





















குருத்துவம் நோக்கி...










ஆண்டவரின் அருள்பணியில்...










en Français le Dimanche
10h00 Basilique Notre-Dame
du Rosaire
11h15 Basilique Notre-Dame
du Rosaire










MACKWOODS







GUCCI




















ST PAUL




பங்குத்தளங்களில்...










சின்னஞ் சிறிய சகோதரங்களுக்கு...












மகிழ்வாய் கூடி












# பயணங்கள்















இமை மூடித்திறந்ததாய்
ஒரு உணர்வு
குருத்துவத்தில்
25 ஆண்டுகள்...
நெஞ்சு நிறைந்த
நினைவுகளோடும்
உணர்வுகளோடும்
நன்றிகளோடும்
நான்



S Graphics
Jaffna. 0777 446973